பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

27 06 2025 7 15

வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் தினதத்தையொட்டி புதுதில்லியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

2. இரு சக்கர வாகனங்களுக்கு சுங்கக் கட்டணம் வசூலிக்கும் திட்டம் எதுவும் இல்லை என மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

3. இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

4. கடல்சார் துறையில் டிஜிட்டல் திறன்களையும் நிதி ஸ்திரத்தன்மையையும் வலுப்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் தெரிவித்துள்ளார்.

5. அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று நடைபெறும் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் தின நிகழ்ச்சியில் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

பொருளாதார வளர்ச்சியில் சிறு, குறு, நடுத்தர நிறுவனங்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் 2017-ம் ஆண்டு முதல் ஜூன்27-ம் தேதி இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

புதுதில்லியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் சிறு, குறு, நிறுவனங்களுக்கு கடன் ஆதரவு வழங்கும் கடன் உத்தரவாத நிதி அறக்கட்டளையின் 25 ஆண்டுகளை நினைவுகூரும் வகையில் சிறப்பு தபால் தலையை குடியரசுத் தலைவர் வெளியிடவுள்ளார்.

இணையதளம் வாயிலாக பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் தளத்தையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

குறு, சிறு நடுத்தர நிறுவனங்கள் தொடர்பான 5-வது ஹேக்கத்தான் போட்டியையும் குடியரசுத்தலைவர் தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் மத்திய சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு ஜிதன் ராம் மாஞ்சி, இணையமைச்சர் செல்வி ஷோபா கரந்த்லாஜே ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

<<<<>>>>

இரு சக்கர வாகனங்களுக்கு சுங்கக் கட்டணம் வசூலிக்கும் திட்டம் எதுவும் இல்லை என மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இதனை அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

இது குறித்து சில ஊடகங்களில் வெளியாதன செய்திகள் தவறானவை என அவர் தெரிவித்துள்ளார்.

இரு சக்கர வாகனங்களுக்கு முழுமையான சுங்க கட்டண விலக்கு தொடரும் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

தவறான செய்திகளைப் பரப்புவது ஆரோக்கியமான ஊடக நடைமுறை அல்ல என திரு நிதின் கட்கரி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டில் ரயில்வே கட்டமைப்புகளை மேம்படுத்த மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து செயல்படுவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

குவாலியர் - பெங்களூரு இடையிலான விரைவு ரயில் சேவையின் தொடக்க விழாவில் காணொலி வாயிலாக பங்கேற்றுப் பேசிய அவர், மத்தியப்பிரதேச ரயில்வே திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு கடந்த 11 ஆண்டுகளில் பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்தப் புதிய ரயில் சேவை மூலம் மகாராஷ்டிரா, தெலங்கானா, ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களைச் சேர்ந்த மக்கள் பயனடைவார்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா, மத்தியப்பிரதேச முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் ராஜமஹேந்திரவரத்தில் அகண்ட கோதாவரி சுற்றுலாத் திட்டத்திற்கு நேற்று அவர் அடிக்கல் நாட்டினார்.

நடப்பு நிதி ஆண்டில் இந்தியாவுக்கு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் 2 கோடி பேர் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகத் அவர் தெரிவித்தார்.

அகண்ட கோதாவரி திட்டம், ராஜமஹேந்திரவரத்தை பெரிய ஆன்மீக மற்றும் கலாச்சார சுற்றுலா மையமாக மாற்றும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் 8 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதுடன், அங்க வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்றும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்தார்.

<<<<>>>>

எரிசக்தி துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து மத்திய அமைச்சர் திரு. மனோகர்லால், இணையமைச்சர் திரு. ஸ்ரீபத்யசோ நாயக் ஆகியோருடன் ஆலோசனை மேற்கொண்டதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், காற்றாலை மின் உற்பத்தி, மின் பகிர்மானம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை எதிர்கொண்டுள்ள சவால்கள் குறித்து ஆலோசனை நடத்தியதாக தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

கடல்சார் துறையில் டிஜிட்டல் திறன்களையும் நிதி ஸ்திரத்தன்மையையும் வலுப்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

நாட்டின் முதல் கடல்சார் வங்கி சாரா நிதி நிறுவனமான சாகர்மாலா நிதிக் கழகத்தை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

முன்பு சாகர்மாலா மேம்பாட்டு நிறுவனம் என அழைக்கப்பட்ட இது தற்போது சாகர்மாலா நிதிக் கழகம் என இப்போது மறு சீரமைக்கப்பட்டு மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

இந்நிறுவனம் ரிசர்வ் வங்கியில் வங்கி சாரா நிதி நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இந்தப் புதிய நிறுவனம் கடல்சார் துறையில் முக்கியமான நிதி இடைவெளிகளைக் குறைக்கும் என அவர் தெரிவித்தார்.

கப்பல் நிறுவனங்கள், கடல்சார் குறு, சிறு, நடுத்தர நிறுவனங்கள் போன்றவற்றின் மேம்பாட்டுக்கு இது உதவும் என அவர் கூறினார்.

<<<<>>>>

ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திருமதி **Penny Wong** உடன் நடத்திய பேச்சுவார்த்தை ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், குவாட் மாநாடு அடுத்த வாரம் நடைபெற உள்ள நிலையில், இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து இந்தப் பேச்சுவார்த்தை நடைபெற்றதாக தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

**Axiom-4** திட்டத்தின் மூலம் ஆய்வு மேற்கொள்வதற்காக சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்குச் சென்ற இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லாவிற்கு மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள் பதிவில், அடுத்து வரும் 14 நாட்களுக்கு சுபான்ஷு சுக்லா மேற்கொள்ள உள்ள ஆய்வு நடவடிக்கைகளை உலகமே ஆவலோடும், எதிர்பார்ப்புகளோடும் உற்றுநோக்குவதாக தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஒடிசாவில் பூரி ஜெகந்நாதர் ஆலய தேரோட்டம் இன்று காலை மணி 9.30க்கு தொடங்குகிறது.

முதல் இரண்டு நாட்களில் இந்த யாத்திரையில் 15 லட்சம் பக்தர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக ஒடிசா அரசு தெரிவித்துள்ளது.

இந்த ரத யாத்திரையையொட்டி 10 ஆயிரம் காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக ஒடிசா காவல்துறை கூறியுள்ளது.

இந்த விழாவையொட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, ஒடிசா முதலமைச்சர் திரு மோகன் சரண் மஜி உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

சத்தீஸ்கட், ராஜஸ்தான், ஒடிசா மற்றும் கேரள மாநிலங்களின் ஒருசில பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

கனமழை எச்சரிக்கையை அடுத்து கேரள மாநிலத்தின் 7 மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர் மழையால் கர்நாடகாவின் சிக்மங்களூரு பகுதியில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கே.ஆர்.எஸ். அணைக்கான நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்துள்ளதன் காரணமாக கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஈரான் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களால் அமெரிக்கா எதையும் சாதிக்கவில்லை என்று ஈரானின் உயர் அதிகாரத் தலைவர் திரு அயதுல்லா அலி கமெனி கூறியுள்ளார்.

இஸ்ரேலுடன் போர் நிறுத்தம் ஏற்பட்ட பிறகு பொதுமக்களுக்கு அவர் ஆற்றிய முதல் உரையில், ஈரானின் அணுசக்தி திட்டத்தை சீர்குலைக்கும் வகையில் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகக் கூறினார்.

ஈரானின் திட்டங்களை அமெரிக்கா குறைத்து மதிப்பிட்டதாகவும் அவர் தெரிவித்தார். ஈரான் மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்பட்டால் உரிய பதிலடி கொடுக்கப்படும் என்றும் திரு கமெனி கூறினார்.

<<<<>>>>

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் உள்ள துர்கை ஆலயம் அகற்றப்பட்ட சம்பவத்திற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சக செய்தித்தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு இந்த விவகாரத்தை முறையாக கையாளத் தவறி விட்டதாக குற்றம் சாட்டினார்.

இதுபோன்ற சம்பவங்கள் பங்களாதேஷில் தொடர்ந்து நிகழ்வது மிகவும் கவலைக்குரியது என அவர் தெரிவித்தார். பங்களாதேஷில் உள்ள சிறுபான்மை இந்துக்களின் உரிமைகளையும் அவர்களது சொத்துக்களையும் பாதுகாப்பது அங்குள்ள இடைக்கால அரசின் பொறுப்பு என்று திரு ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்து நடவடிக்கையின் ஒரு பகுதியாக ஈரானில் இருந்து மேலும் 173 இந்தியர்கள் நேற்றிரவு இந்தியா அழைத்து வரப்பட்டனர்.

இதுவரை 4 ஆயிரத்து 415 இந்தியர்கள் ஈரானில் இருந்து அழைத்து வரப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

அமெரிக்க ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர் 21-12, 13-21, 21-15 என்ற செட் கணக்கில் தருண் மன்னேபள்ளியை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் தன்வி ஷர்மாவும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-------------

மாஸ்டர்ஸ் கோப்பை ஹாக்கிப் போட்டியின் ஆடவர் பிரிவு இறுதியாட்டத்தில் தமிழ்நாடு அணி – மகாராஷ்டிர அணியை இன்று எதிர்கொள்கிறது.

மகளிர் பிரிவில் ஒடிசா அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

------------

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் நெல்லையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் திண்டுக்கல் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் நெல்லை அணியை வென்றது.

---------------

இந்தியா - இங்கிலாந்து இடையிலான 19 வயதுக்குட்பட்டோருக்கான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி **Hove**-ல் இன்று நடைபெறுகிறது.

இந்திய நேரப்படி இப்போட்டி பிற்பகல் மணி 3.30க்கு தொடங்குகிறது.

இரு அணிகளும் 5 போட்டிகளைக் கொண்ட தொடரில் விளையாட உள்ளன.

<<<<>>>>